# சதயம் நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ சதயம் சக்தி**

பரிமிதாதீதம், பரோதயம், பரகிதம்,

பரபரீணம்பராந்தம்

**3. திருப்பாவைபாசுரம் – 16 சதயம் இயல்பு**

நாயக னாய்நின்ற நந்தகோ பனுடைய

கோயில் காப்பானே கொடித்தோன்றும் தோரண

வாயில் காப்பானே மணிக்கதவம் தாள்திறவாய்

ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை

மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்

தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்

வாயால் முன்னம்முன்னம் மாற்றாதே அம்மா நீ

நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்

**Video Link : https://youtu.be/sw0zGKF1e-s**

**விளக்கம் :**

கோயில்காப்பானே, கொடிக்தோன்றும் தோரணம் ஒன்றல்ல, பத்தல்ல நூறு வார்த்தைகளின் ஆற்றலை கொண்டது. உங்களின் ஒரு சொல்லாகும், உங்களின் இதே பாணியில், உங்களின் ஒரு செயல் நூறு விளைவுகளை ஏற்படுத்தும். கோயில் காப்பானே, வாயில் காப்பானே, நாயகனே கொடித் தோரணம், என பலப்பல பணிகள் நூறாயினும் பகவானுக்கு அர்பணம்

செய்யும் சாதனையாளர் இந்த சதயமாகும். இவற்றைப் பட்டியலிட இதை உதயம் என்பதா? இல்லை அதீதம் என்பதா? அல்லது ரகிதம் என்பதா? அல்லது பரபரீணம் என்பதா? அல்லது பராந்தம் என்பதா? மனிதநேயம் விளங்கச் செய்ய உங்கள் செயல்பாடுகள் பரிமளிக்கும். இதையே நேய நிலைக்கதவம், நீக்க வல்லவர் நீவீரே ஆவார். உங்களின் வாக்கு வல்லமை வாய்ந்தது. நீங்கள் ஒரு தடவை பாராட்டினால் அது நூறு தடவை பாராட்டியதற்கு சமம். எனவே நீங்கள் ஒரு தடவை திட்டினால் நூறு தடவை திட்டியதற்கு சமம். ஆகையால் நீங்கள் யாரையும் எவரையும் திட்டக்கூடாது. கசரக்கூடாது. வாயில் முன்னம், முன்னம் மாற்றாதே துயிலும் தூய்மையும் இரு துருவங்களாயிருந்தாலும் துயில் எழுந்தாலும், தூய்மை ஆற்றலும் எனக்கே சொந்தம். ஆன்மீகத்தை அறிவியலாக தூய்மைப்படுத்தும்.

நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய கோயில் காப்பானே, சதயமாகும். சதயத்தின் பணிகள் சதமாகும்; கோயில் பணிகள், வாயில் பணிகள், கொடித் தோன்றும் தோரணப் பணிகள், மணிக்கதவம் தாள் திறக்கும் பணிகள், ஆயர் சிறுமியர் என அறைபறை பணிகள் நூறாக பரோதயமாக பரகிதமாக பரபரீணமாக பராந்தமாக பரிமளிப்பதே சதயத்தின் செயல் திட்டம் ஆகும்.

முடியாது என்று சொல்லாமல் உன்னால் முடியும் என்று அற்புதத்தை ஏற்படுத்த பரிமதாதீதத்தை வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா நீ. நேய நிலைக்கதவம் நீக்க தகுதியும், திறமையும் சதயத்திற்கே உண்டு. எனவே பேச்சை குறைத்து மூச்சை அதிகரித்து நேசத்தை இணைத்து வைத்து பாசத்துடன் பழகி கதவுகளை விலக்கி திறந்து உடல், பொருள், ஆவி அனைத்தும் சுகம் பெற உதய நிலவாக உதய ஞாயிறாக பரோதயத்தை சதயம் அருள வேண்டும். கருநீல மணிவண்ணன் உனக்களித்த

அருளாசிகளை, அரும்பெரும் பொருள் அற்புதங்களை உலகத்தோர் அனுபவிக்க வாய்ப்புத்தர வேண்டியது சதயத்தின் இயல்பாகும்.

தூயமேயாய் வந்தவர்களே பறை முரசும் பெற தகுதி உள்ளவர்களை இனங்கண்டு அவர்களை ஏமாற்றாமல் கசராமல், கருணை காட்டுவார்கள், சதய சத்புருஷர்கள். சதயமே வருக! சதயமே அருள்க!

## 4. வேதத்தில் சதயம் ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

பேஷஜயா வித்மஹே

வருண தேஹா தீமஹி

தீர்க்கவசிஷ்ட தீமஹி

சதாபிஷேக் ப்ரசோதயாத்

உதிப்பவை நாலும் தேராகும்

உதிர்ப்பவை ஒன்றும் நூறாகும்

உணர்பவை என்றும் உறவாகும்

உலகியல் நூறே நமோ நமோ

சதம் சதம் நின் இயல்பன்றோ

கதம் கதம் உன் பலமன்றோ

வதம் வதம் உடன் மூடமன்றோ

சரம் சரம் மழை நமோ நமோ

ஓம் சிவாய மே நம சிவாய மே

த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. சதயம் கவிதை

செயல் ஒன்றெனினும் சமூகத்தில் சதமதுவே
வயல் சிறிதெனினும் பரம்செல்லும் வரம்பதுவே
கயல் உதயமெனினும் பாற்கடல் நின்பட்டாவே
அயல்ாடெனினும் இலக்கெலாம் சிதம்பரமே

சாதனையாளரெனினும் – சோதனை வரவழைப்பார்
போதனையாளரெனினும் – எதிரியிடம் எதற்கஞ்சார்
வாதனை பேசினும் விசாலமே விலாசமாகும்
ரோதனை எதுவரினும் உதயமே உடன் தீர்வாம்

உதிக்கும் அதீதமே உதய நிதியே நீ
பதிக்கும் பாசமே இகபர உல்லாசமே!
எதிக்கும் நேசமே இதையும் சுகிப்பாயே?
மதிக்கும் பூச்சியமே மற்றதைப் பகையாதே;

பால் பாக்கியம் நீவரப் பெற்றதன்றோ?
ஆல் அமர்க்களம் நீ உடன் கற்றதன்றோ?
வால் விமர்சனம் நீ தரின் சாபமன்றோ?
சால் பரகிதம் நீ இடின் அட்சயமன்றோ?

நூறுகள் நின்னியல்பு தொன்னூறா காதே
ஆறுகள் நின் ஜீவன் எந்நாளும் காயாதே
ஊறுகள் நின் போதை பரசிந்தனை சலியாதே
சாறுகள் நின் சித்தம் நவசித்தம் சளைக்காதே

நட்பு நலமானால் தலைமை தழைத்தோங்கும்
இலக்கு இதமானால் இனிமை இகம் தாங்கும்
வழக்கு வளமானால் வயது பரம் பார்க்கும்
சுடக்கு சுரமானால் பாட்டு புரட்டா தேங்கும்

## 6. அபிராமி அந்தாதியில் சதயம் சக்தி

**துன்பங்கள் நீங்க**

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும், பனிச்சிறை வண்டு

ஆர்க்கும் புதுமலர் ஐந்தும், கரும்பும் என் அல்லல்எல்லாம்

தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்,

வார்க்குங்கும முலையும், முலைமேல் முத்துமாலையுமே.

**ஆயுத பயம் நீங்க**

மாலயன் தேட, மறைதேட, வானவர் தேட, நின்ற

காலையும், சூடகக் கையையும், கொண்டு, கதித்தகப்பு

வேலை வெங்காலன் என்மேல் விடும்போது வெளிநில்கண்டாய்;

பாலையும் தேனையும், பாகையும் போலும் பணிமொழியே.

**செயற்கரிய செய்து புகழ் பெற**

மொழிக்கும், நினைவுக்கும் எட்டாத நின் திருமூர்த்தி என்தன்

விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால்! விழியால் மதனை

அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்

பழிக்கும் படி ஒருபாகம் கொண்டாளும் பராபரையே.

**எப்போதும் அம்பிகை அருள் பெற**

பரம் என்று உனை அடைந்தேன் தமியேனும்; உன் பக்தருக்குள்

தரம் அன்று இவன்என்று தள்ளத்தகாது; தரியலர் தம்

புரம்அன்று எரியப் பொருப்புவில்வாங்கிய போதில் அயன்

சிரம் ஒன்று செற்ற கையான் இடப்பாகம் சிறந்தவளே!

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் சதயம் சக்தி ஓம்... ஓம்... ஓம்...

ஓம் ஸத்தவவதே நம – பலமூட்டும் பந்தய நாயகனே போற்றி

ஓம் ஸாத்த்விகாய நம – சத்துவ குணத்தின் சதமே போற்றி

ஓம் ஸத்யாய நம – நல்லவர்களுடைய நாயகனே போற்றி

ஓம் ஸத்ய தர்ம – பராயணாய நம – புத்தி, கர்ம பணிகளின் அணிகலனே போற்றி

ஓம் அபிப்ராயாய நம – வெற்றி நுணுக்கங்களின் செயல்முறையே போற்றி

ஓம் ப்ரியார்ஹாய நம – பிரியமான பாண்டித்ய நடைமுறையே போற்றி

ஓம் அர்ஹாய நம – ஆராதனைக்குரிய ஆட்டங்களே போற்றி

ஓம் ப்ரியக்ருதே நம – அனைவர்க்கும் உரிய பணியை அரவணைப்பவனே போற்றி

ஓம் ப்ரீதி – வர்தத்நநாய நம – மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தும் ஆராவாரமே போற்றி

ஓம் விஹாயஸகதயே நம – உலகவிடயங்களின் வெற்றித் துணையே போற்றி

ஓம் ஜ்யோதிஷே நம – சுயமாக ஒளியிடும் ஜோதியே போற்றி

ஓம் ஹுருசயே நம – ருசிகரம் அளிக்கும் கவர்ச்சியே போற்றி

ஓம் ஹுதபுஜே நம – நெய்வேத்யமேற்கும் நூறு சிறுதெய்வங்களே போற்றி

ஓம் விபவே நம – வியாபித்திருக்கும் வியப்பான விந்தை உலகமே போற்றி

ஓம் ரவயே நம – சப்தசுரங்களின் நவரசமே போற்றி

ஓம் விரோசநாய நம – அநேக வழி பரிணாம வளர்ச்சிப் பணியே போற்றி

ஓம் ஸுர்யாய நம – செல்வ ஜோதியாக விளங்கும் சூரியனே போற்றி

ஓம் ஸவித்ரே நம – உலகத்தில் பிரசவிக்கும் வசந்தமே போற்றி

ஓம் ரவிலோசநாய நம – ஆதித்ய உதய சூரியனின் கடைக்கண் அருளே போற்றி

| | |
|---|---|
| ஓம் அநந்தாய நம | – அனந்த ஆனந்த ஆட்டம், பாட்டம், கொண்டாட்டமே போற்றி |
| ஓம் ஹுதபுஜே நம | – யாகத்தில் உள்வாங்கும் உண்மை உணர்வே போற்றி |
| ஓம் போக்த்ரே நம | – போகம் காணும் பூகூட அறியாத தேனீயே போற்றி |
| ஓம் ஸுகதாய நம | – முக்தி சுகத்தை முன்னவருக்கு தருபவனே போற்றி |
| ஓம் நைகஜாய நம | – பிறவிகளைக்காணவே அஞ்சா நெஞ்சனே போற்றி |
| ஓம் அக்ரஜாய நம | – பிரம்மாவின் பிறப்பறியும் பத்மநாபனே போற்றி |
| ஓம் அநிர்விண்ணாய நம | – சர்வ சுக துக்கங்களின் மொத்த அனுபவமே போற்றி |
| ஓம் ஸதாமர்கூஷிணே நம | – பொறுமையின் சிகரமான நம்பிக்கையே போற்றி |
| ஓம் லோகாதிஷ்டாநாய நம | – மூவுலகை நிர்மாணித்து நிர்வாகம் செய்பவனே போற்றி |
| ஓம் அத்புதாய நம | – ஆச்சரியமே, அதிசயமே போற்றி |
| ஓம் ஸநாதே நம | – பொன் போன்ற காலமே போற்றி |
| ஓம் ஸநாதநமாய நம | – அமரத்துவ மூத்த ஆத்மாவே போற்றி |
| ஓம் கபிலாய நம | – உழைப்பின் சிவப்பே போற்றி |
| ஓம் கபயே நம | – ஆவியாக்கும் நீரின் அதிபதியே போற்றி |
| ஓம் அவ்யயாய நம | – களையெடுத்து கடைகளம் காண்பவனே போற்றி |
| ஓம் ஸ்வஸ்திதாய நம | – சுப சுவாகதமே போற்றி |
| ஓம் ஸ்வஸ்திக்ருதே நம | – சுபலாப ஸ்வஸ்திகே தெய்வங்களே போற்றி |
| ஓம் ஸ்வஸ்தயே நம | – வெற்றி ஸ்வஸ்திக்கே போற்றி |
| ஓம் ஸ்வஸ்திபுஜே நம | – உலகை காக்கும் சுபலாபமே போற்றி |
| ஓம் ஸ்வஸ்திதகூஷிணாய நம | – மாறில்லா லாபநிலைப்பாடே |

## 8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் சதயம் சக்தி

குலோத்தீர்ணா பகாராத்யாமாயா மதுமதீ மஹ
கணாம்பாகுஹ்யகாரத்யாகோமலாங்கீ குருப்ரியா

ஸ்வதந்த்ரா ஸர்வதந்த்ரேசி தக்ஷிணாமூர்த்தி ரூபிணி
ஸநகாதி ஸமாராத்யா சிவஜ்ஞானப்ரதாயிநீ

சித்கலாநந்தகலிகாப்ரேமரூபாப்ரியங்கரீ
நாமபாராயணப்ரீதாநந்திவித்யாநடேச்வரீ

மித்யா ஜகததிஷ்டாநாமுக்திதா முக்திரூபிணீ
லாஸ்யப்ரியா லயகரீ லஜ்ஜாரம்பாதிவந்திதா

பவதாவ ஸுதாவ்ருஷ்டி பாபாரண்யதவாநலா
தௌர்பாக்யதூலவாதூல ஜராத்வாந்தரவிப்ரபா

பாக்யாப்தி சந்த்ரிகாபக்தசித்தகேகி கநாகநா
ரோகபர்வததம்போலிர்ம்ருதியுதாருகுடாரிகா

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் சதயம் சக்தி

என்னில் உனைக்காட்டி உன்னில் தனைக்காட்டி

எங்கும் தனைக்காட்டி எங்குமுனைக் காட்டிடுவன்

ஸ்கந்த ஜோதியான கந்தன் ஸ்கந்தகிரி யிருந்து

தண்டாயுதம் தாங்கித் தருகிறான் காட்சியுமே

ஸ்கந்தகிரி வந்துநிதம் கண்டுய்மின் ஜகத்தீரே

கலிதோஷ மகற்றுவிக்கும் ஸ்கந்தகுரு கவசமிதைப்

பாராயணம் செய்து பாரில் புகழ்பெறுமின்

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

## 10. கந்தர் அநுபூதி சதயம் சக்தி

தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினது அன்பு அருளால்
ஆசா நிகளம் துகளாயின பின்
பேசா அநுபூதி பிறந்ததுவே.(43)

சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும் படி தந்தது சொல்லு மதோ?
வீடும், சுரர் மாமுடி, வேதமும், வெம்
காடும், புனமும் கமழும் கழலே.(44)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

## 11. ராகங்களில் சதயம் சக்தி

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| ரிஷப பிரியா | லாதங்கி | வச்சஸ்பதி | வச்சஸ்பதி |

## 12. மூலமந்திரம்

ஓம் அஸ்வத்வஜாய வித்மஹே
பாஸ ஹஸ்தாய தீமஹ
தன்னே ஸுர்யஃப்ரசோதயாத்

## 13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| கடம்பு | பிராய் | அத்தி | அரசு |

## 14. பரிகாரம்

- கரும்பு எறும்புகளுக்கு எள்ளும் சர்க்கரையும் அளிக்கவும்
- நட்சத்திரநாளில் நூறுபேருக்கு பால்தானம் செய்யவும்.

- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு அக்னிபுரீஸ்வரர் திருக்கோயில்,** திருப்புகலூர் - திருவாரூர்.


Aathma Trust **(ஆத்ம லிங்கம்)**

Regd No: 96/19

33.கோசாலை, கிரிவலம்,

திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org

www.yaasha.in

**Email :** jhohumm@gmail.com

**Youtube :** aathmanakshatra